சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்
HMOP No.7/2024

பெயர். திரு. முருகன் த/பெ. தாமோதரன் நாள் 25.07.2025

**மனுதாரர் சா.3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1. முதல் விசாரணை விவரங்களை நான்தான் கூறினேன். மனுதாரர் எதற்காக மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எதிர்மனுதாரர் அடிக்கடி சண்டை போடுவதால் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் திருமணத்திற்கு சென்றுள்ளேன். தேதி ஞாபகம் இல்லை. திருமண மண்டபம் வில்லியனூரில் உள்ள அன்னை லூர்து மண்டபம் ஆகும். மனுதாரரின் நண்பர் என்னுடைய நண்பர் என்னும் வகையில் மனுதாரரைத் தெரியும். ஏற்கனவே மனுதாரர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார். அந்த மனு சேர்ந்து வாழத்தான் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதன் விவரம் தெரியாமல் நான் பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். மாதம் அவருக்கு எவ்வளவு வருமானம் என்று எனக்குத் தெதரியாது. அவருடைய அலுவலகம் வீட்டின் மேல் தளத்தில் வைத்துள்ளார். எதிர்மனுதாரரின் பெயர் எனக்குத் தெரியாது. அதனால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரச்சனை குறித்து எனக்குத் தெரியும். எதிர்மனுதாரரை நான் பார்த்துள்ளேன். அவரை எனக்குத் தெரியும். பிரச்சனை நடந்தபொழுது நான் உடனிருந்தேன். காவல் நிலையத்தில் நான் புகார் ஏதும் அளிக்கவில்லை. நான் கூறுவதுபோல் பிரச்சனை ஏதும் நடக்கவில்லை என்றாலுரும், மனுதாரரும் அவரது பெற்றோரும்தான் எதிர்மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டனர் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் பிரச்சனை நடந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்போம் என்றாலும், பிரச்சனை இல்லை என்பதால்தான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மனுவிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.